# அரச ஈட்டு முதலீட்டு வங்கி

குடியிருப்பதற்கான வீடு/ கட்டடத் தொகுதியைக் கொள்வனவு செய்தல் அல்லது கடனை மீளச் செலுத்துதல் போன்ற நோக்கங்களுக்கான கடன் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள்

**<u>கடன் திணைக்களத்திற்கானது</u>**

1. விற்பனை செய்வதற்கான இணக்கம், விற்பனை விலை, செலுத்தப்பட்ட முற்பணங்கள் போன்றவற்றை உறுதிப்படுத்தும் விற்பனை ஒப்பந்தத்தின் பிரதியொன்று அல்லது விற்பனையாளரிடமிருந்தான ஒரு கடிதம் மற்றும் விற்பனையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதியொன்று.
2. வருமானம் தொடர்பான ஆவணரீதியான சான்று:

   (அ) உங்களது வருமானமானது சம்பளமாகவிருப்பின் ஆறுமாதச் சான்றுப்படுத்த சம்பளப்பட்டியலுடன் தொழில்புரியும் காலம், மொத்த வருமானம், கழிப்பனவுகள், தேறிய வருமானம் என்பவற்றை உறுதிப்படுத்தித் தொழில்தருநரால் வழங்கப்படும் கடிதம்.

   (ஆ) உங்களது வருமானம் வியாபாரம் மூலமானமானதாகவிருப்பின், வியாபாரப் பதிவின் பிரதியொன்று, கடந்த 3 வருட காலத்திற்கான இலாப நட்டக் கணக்கு, நீங்கள் வருமான வரி செலுத்துபவராக இருந்தால், கடந்த 3 வருடத்திற்கான வரிப் பற்றுச் சீட்டு மற்றும் தற்போதைய வருமானத்திற்காக வருமானக் கூற்று

   (இ) உங்களது வருமானம் விவசாயச் சொத்தின் மூலமானதாகவிருப்பின், சொத்திற்குரிய உரித்தாவணத்தின் பிரதி, மதிப்பிடப்பட்ட வருமானச் செலவுக் கூற்று மற்றும் கடந்த மூன்று வருடகாலங்களில் சொத்திலிருந்து பெறப்பட்ட வருமானம்.

   (ஈ) வருமானம் வாடகை வருமானமாகவிருப்பின் தொடர்புடைய ஒப்பந்தங்கள் மற்றும் உரித்தாண்மைப் பிரதிகள்/ வாகனப் பதிவுப் புத்தகம் மற்றும் ஏனைய ஆவணங்கள்.

   (உ) நீங்கள் வெளிநாட்டில் பணிபுரிந்தால், வேலை ஒப்பந்தத்தின் பிரதி, தொழில் புரியும் காலம் மற்றும் சம்பளத்தை உறுதிப்படுத்தும் சம்பள உறுதிப்படுத்துகைக் கடிதம், கடந்த ஆறுமாதங்களுக்கான சம்பளப் பட்டியல்கள், சம்பளம் அனுப்பி வைக்கப்படும் வங்கிக் கணக்கிற்கான கடந்த ஆறுமாத வங்கிக்கூற்று, இலங்கைக்குப் பணம் அனுப்புவதனை உறுதிப்படுத்தும் ஆவணரீதியான சான்று மற்றும் கடவுச் சீட்டினதும் வீஸாவினதும் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்.

3. கடந்த ஆறு மாதத்திற்கான வங்கிக்கூற்று

4. உள்ளூராட்சி நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, கட்டட வரைபட மற்றும் நில அளவையாளர் வரைபடப் பிரதிகள்.

5. உரித்தாண்மை ஆவணத்தின் பிரதியொன்று

6. பிணையம் வழங்கப்படுவதற்குப் புறம்பாக, நோக்கமானது சொத்தொன்றைக் கொள்வனவு செய்வதாக இருப்பின், பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். (அ) கொள்வனவு செய்யவுள்ள சொத்தின் நிலஅளவை வரைபடப் பிரதி மற்றும் கைமாற்றல் உரித்தாண்மை (ஆ) சொத்தினை அணுகுவதற்கான பாதை வரைபடம்

7. வீதிக் கோட்டுச் சான்றிதழின் பிரதி (பிணையம்)

8. விண்ணப்பதாரியினது தேசிய அடையாள அட்டையினது தெளிவான பிரதி

9. விண்ணப்பதாரியின் இரண்டு நிழற்படங்கள் (அளவு 2X2")

10. திருமணச் சான்றிதழின் பிரதியொன்று (திருமணமானவராயின்)

11. நோக்கம் கடனை மீளச் செலுத்துவதாகவிருப்பின், குத்தகை ஒப்பந்தத்தின் சான்றுப்படுத்திய பிரதி (ஏதேனுமிருப்பின்), கடன் தொகை, நோக்கம், மாதாந்த தவணைக் கட்டணம் மற்றும் மீதியைக் குறிப்பிட்டு கடன் கொடுத்தவரால் வழங்கப்படும் கடிதம்

சட்டத் திணைக்களத்திற்கு

1. உரித்து அறிக்கை மற்றும் வங்கிக் குழாத்திலிருந்தான சட்டத்தரணிகளிடமிருந்தான உரித்தறிக்கையின் அட்டவணை
2. அசல் நிலஅளவை வரைபடம் (20 வருடங்களுக்கு முற்பட்ட வரைபடமாக இருத்தலாகாது)
3. ஏற்புடையபோது, அற்றோனித் தத்துவம் (அசல்)
4. முன்னைய உரித்தாவணங்கள் ஏதேனும்/ பிணையாக வைக்கும் சொத்தினது வரைபடங்கள்
5. பிணையாக வைக்கும் சொத்து அமைந்துள்ள கிராம சேவகர் அலுவலகப் பிரிவு மற்றும் பிரதேச செயலாளர் பிரிவினை உறுதிப்படுத்தும் கிராம சேவகரின் கடிதம்

உள்ளூராட்சி நிறுவனம் மூலம் பின்வரும் ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்

1. உரிமைத்துவச் சான்றிதழ்
2. வீதிக் கோட்டு வரைபடம்
3. தத்துவம் அளிக்கப்படாமைக்கான சான்றிதழ்
4. இறுதிக் காலாண்டிற்கான வரிப் பற்றுச் சீட்டு
5. மதிப்பீட்டு அறிவித்தல்